பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 135 நாள்: 06.09.2018

## பெருநகர சென்னை மாநகராட்சியில் பசுமை பரப்பளவை அதிகரிக்கும் வகையில் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் 23,000 மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்படவுள்ளது !

## பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தகவல் !!

= = = =

பெருநகர சென்னை மாநகரில் கடந்த 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வர்தா புயலின் காரணமாக, தெருக்கள் மற்றும் சாலைகளில் ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்து பசுமைப் பரப்பளவு வெகுவாக குறைந்தது. இதனை ஈடுசெய்யும் வகையில், 2018–19ம் நிதியாண்டில் சுமார் 23,000 மரக்கன்றுகள் நட்டு ஒரு ஆண்டு பராமரிக்க ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரின் பசுமை பரப்பினை அதிகரித்திடும் வகையில், சாலைகள், தெருக்கள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றில் இந்த மரக்கன்றுகள் நடும் பணிகள் உடனடியாக துவங்கப்பட்டு அக்டோபர் இரண்டாம் வாரத்தில் பருவமழை காலத்திற்கு முன்னதாக முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் புயல் மற்றும் இயற்கை சீற்றங்களை தாங்கக்கூடிய வகையிலும், நீண்ட நாட்களுக்கு பயனுள்ளதாகவும், அனைத்து மண்டலங்களிலும் மண்ணின் தன்மை, கிடைக்கும் தண்ணீரின் தரம், அளவு ஆகியவற்றின் அடிப்படையில் மரக்கன்றுகளை அந்தந்த இடத்திற்கு ஏற்றாற்போல் தேர்வு செய்து நடுவதற்கும், சாலைகள் மற்றும் தெருக்களின் அகலத்திற்கு ஏற்ற மரவகைகளை நடவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**நடப்பு நிதி ஆண்டில் (2018–19) நடவு செய்யப்படும் மரக்கன்றுகளின் விவரங்கள்**

| வ. எண் | இனங்களின் பெயர் | பொதுப்பெயர் | நடப்படும் மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | **Albizia lebbeck** (L) willid | வாகை | 1000 |
| 2. | **Azadirachta Indica** A.Juss | வேம்பு | 2000 |
| 3. | **Bauhinia purpurea** L. | மந்தாரை | 1000 |
| 4. | **Calophyllum inophyllum** L. | புன்னை, பின்னை | 1700 |

| | | | |
|---|---|---|---|
| 5. | **Dalbergia sisso** Roxb | சிசு | 1200 |
| 6. | **Erythrina variegate** L. | கல்யாண முருங்கை | 1000 |
| 7. | **Ficus religiosa** L. | அரசமரம் | 1600 |
| 8. | **Hibiscus tilliaceus** L. | நிர்பரத்தி, அதுபருத்தி | 1000 |
| 9. | **Lannea coromadelica** (houtt). Merr. | ஒதிய மரம் | 1000 |
| 10. | **Melia dubia** | மலை வேம்பு | 1000 |
| 11. | **Mimusops elegy** L. | மகிழம் | 1000 |
| 12. | **Pongamia pinnata** (L.) Pierre | புங்கமரம் | 2000 |
| 13. | **Swietenia macrophylla** king | மகாகனி | 1000 |
| 14. | **Syzygium cumini** (L) Skeels | நாவல் | 1500 |
| 15. | **Terminalia arjuna** (Roxb.) W&Arn | நீர்மருது | 1000 |
| 16. | **Terminalia catappa** L. | நாட்டு பாதாம் | 2000 |
| 17. | **Thespesia Populnea** (L) Soland ex correa | பூவரசு | 2000 |
| **மொத்தம்** | | | **23,000** |

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் பசுமை பரப்பளவை கண்டறிந்து, அதில் பசுமை பரப்பளவு குறைவாக உள்ள இடங்களில் ஒவ்வொரு வருடமும் 1 லட்சம் மரக்கன்றுகள் என ஐந்து வருடங்களுக்கு மேற்குறிப்பிட்ட அட்டவணையில் உள்ள பாரம்பரிய வகை மரக்கன்றுகள் நட முடிவு செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**